2008 ஏப்ரல் 29]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் கூறியவாறு இடம் இருந்தால், இந்த வருடம் முதன்முறையாக நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் கட்டாயமாக குழந்தைகள் மையம் கட்டுவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று வலியுறுத்தி ஆணை பிறப்பித்துள்ளார்கள். அதனைக் கருத்தில்கொண்டு அவர்கள் இடம் கொடுத்தால் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியின் வாயிலாக ஒரு அங்கன்வாடி மையத்தைக் கட்டிக்கொள்ளலாம். அதற்கு அரசு சிறப்பு அனுமதி அளிக்கும் எனத் தங்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்

(அ) ஒரே ஏவுகணையில் 10 செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பிய சாதனைக்காக விஞ்ஞானிகளுக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். நேற்றையதினம் 28–4–2008 அன்று இந்திய விஞ்ஞானிகளால் உலகிலேயே முதல்முறையாக ஒரே நேரத்தில் 10 செயற்கைக்கோள்களுடன் இந்தியாவின் PSLV C 9 ராக்கெட் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. இது இந்திய விண்வெளி வரலாற்றில் மாபெரும் சாதனையாகக் கருதப்படுகிறது. இம்மகத்தான பணியில் ஈடுபட்ட இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத் தலைவருக்கும், விண்வெளி விஞ்ஞானிகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாகவும், என் சார்பாகவும், பேரவையின் சார்பாகவும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)